# தமிழ்த்துறை:-

“ யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி
போல் இனிதாவது எங்கும் காணோம் ”

பாரதியாரின் கூற்றை பறைசாற்றும் வகையில் உலகில் தோன்றிய மொழிகளில் முதன்மையான மொழி தாய் மொழியாகிய தமிழ்மொழியே. இம்மொழிக்குரிய சிறப்பு போன்று வேறு எந்த மொழியிலும் கிடையாது என்பது அனைவரும் அறிந்தது. இன்றைய மாணவிகளுக்கு கல்வி, வீரம், கொடை, சிறப்பு, பண்பாடு, வாழ்க்கைமுறை, இவை அனைத்தையும் பாங்குடன் பக்குவமாக சொல்லக்கூடிய ஒரே இலக்கியம் தமிழ் இலக்கியம். எனவே மாணவிகளின் எதிர்கால நலன்கருதி தமிழ்த்துறை செயல்படவுள்ளது. மாணவிகளை திறனாய்வு நோக்கி ஆராய்ச்சி மாணவிகளாக உருவாக்கி எதிர்காலத்தில்

“ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்”

என்ற குறளுக்கு இணங்க தமிழில் சிறந்த சான்றோர்களாக உருவாக்கி மாணவிகளின் திறன்மேம்பட கல்வியினைக் கற்பிப்போம்.

# பார்வை:-

தமிழ்மொழி கற்றலின் மூலம் மாணவிகள் தங்கள் பேசும் திறமையை வளப்படுத்தவும், மேலும் அவர்களது கலாச்சாரம் பாரம்பரியம் பற்றி அறியவும், அதனை கடைப்பிடிக்கவும் தூண்டுகோலாக இருக்கும்.

# குறிக்கோள்:-

தமிழ்மொழியை ஒரு வேடிக்கை மற்றும் காட்சிப்படுத்துவதன் மூலம் மாணவிகள் சிறப்பான வாழ்க்கையை வாழக்கற்றுக்கொள்வார்கள். கல்லூரிகளில் தமிழ் வழி கற்றலின் மூலம் தமிழ்மொழிக்குரிய தொன்மையை அறிந்து ஆராய மாணவிகளுக்கு வாய்ப்புகள் வழங்கப்படும்.

# நோக்கங்கள்:-

- தமிழ் மொழியைக் கற்றுக்கொள்வதன் மூலம் நமது பாரம்பரியம் மற்றும் பண்பாட்டை அறிந்து கொள்ள மாணவிகளின் ஆர்வத்தை தூண்டுதல்.
- வாய்மொழி மற்றும் எழுத்துப்பயிற்சி வழியாக தமிழ்மொழியை மாணவிகளுக்கு பயனுள்ள மற்றும் நம்பகமான வகையில் கருத்துப்பரிமாற்றத்தை உருவாக்குதல்.
- தமிழின் தொண்மைகளை அறிந்தவர்கள் “கல்லாடம் படித்தவனிடம் சொல்லாடாதே” என்ற கூற்றினை மெய்ப்பிக்கும் வகையில் தமிழ் இலக்கியம் மற்றும் இலக்கணங்களின் பெருமைகளை எடுத்து இயங்கும் வகையில் மாணவிகளை தயார்படுத்துதல்.

**STAFF PROFILE**

| S.No | Staff Name | Designation |
|---|---|---|
| 1 | **M. GOKILA DEVI** M.A., B.Ed., M.Phil., SET | Head I/C, Assistant Professor |